# தமிழ் கல்விநிலையம் – மவுண்றூயிட்

**Tamil Study Centre - Mount Druitt**

*Email :mtdruitttsc@gmail.com* *Mobile: 0449 892 066* *Web : www.mtsc.org.au*


## பேச்சுப்போட்டி– 2018

## ஆண்டு 6

# தன்னம்பிக்கை

அனைவருக்கும் எனனது அன்பு வணக்கம்!

“தன்னம்பிக்கை” என்ற தலைப்பில் உரையாற்றுவதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

நம் மீது நாம் வைக்கும் நம்பிக்கையின் பெயர்தான் – **தன்னம்பிக்கை** என்பதாகும். இந்த தன்நம்பிக்கை ஒவ்வொரு மனிதனுக்கும் அவசியம் தேவை. குறிப்பாக மாணவர்களாகிய எமக்கு மிக மிக அவசியம்.

தன்னம்பிக்கையில் இருந்து தான் மன உறுதியும், மன வலிமையும் உருவாகிறது. இந்த நம்பிக்கை இல்லாவிட்டால் எதையும் வெற்றி கொள்ள முடியாது.

“என்னால் இதை செய்ய முடியும்” என்ற திட நம்பிக்கையில் எந்தச் செயலில் இறங்கினாலும் அது நிச்சயம் வெற்றி அடையும், மகத்தான சாதனைகளையும் படைக்க முடியும்.

ஆன்மீகவாதிகள், அறிஞர்கள், எழுத்தாளர்கள், விளையாட்டு வீரர்கள், விஞ்ஞானிகள் என பலதரப்பட்ட துறை வல்லுனர்களும் தன்னம்பிக்கையினால் தான் சாதனை படைத்து வருகின்றார்கள்.

விஞ்ஞானத்தின் அரிய கண்டுபிடிப்புகளும் தன்னம்பிக்கையினால் உருவானவையே. அதன் நன்மைகளை தினம் தினம் நாமும் அனுபவித்து பயனடைகின்றோம்.

எனவே தன்னம்பிக்கையினால் சாதிக்க முடியாதது எதுவுமில்லை என தெரிவித்து எனது உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி, வணக்கம்.

ஆக்கம்: ஆசிரியர் எஸ்.கனகசிங்கம்